**O.S. 47/2023** **நாள்: 06-07-2026**

**DW1 கண்ணன் த/பெ அய்யாறு**

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

**சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பு வழக்கறிஞரால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.**

1. தாவா சொத்தை நான் சாகுபடி செய்வதற்குண்டான ஆவணங்கள் ஏதேனும் வைத்திருக்கிறேனா என்றால் வாய்மொழியாகத்தான் பேசி சாகுபடி செய்து வருகிறேன். இந்த வழக்கு நாகப்பட்டினம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண் 140/2016 என்று கோப்பில் எடுக்கப்பட்டு விசாரணையில் இருந்த நிலையில் இந்த நீதிமன்றத்திற்கு ஆள் வரையரையின் காரணமாக மாற்றப்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்தினை யாரிடமிருந்து பெற்றேன் என்றால் சண்முகப்பிள்ளை மகன் மாரிமுத்து என்பவரிடமிருந்து வாய்மொழியாக பெற்றேன்.

2. நான் வாய்மொழியாக பெற்ற சாகுபடி நிலத்தின் புல எண் என்னவென்றால் 68/3 ஆகும். நாகப்பட்டினம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் IA 596/2016-ல் 10.07.2017-ல் எனக்கு எதிராக உறுத்துக்கட்டளை பிறப்பிக்கப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. IA 596/2016-ல் 10.07.2017-ல் எனது வழக்கறிஞர் வாதம் செய்த விபரம் எனக்கு தெரியும். எனக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் பேரில் நான் வயலில் இறங்கி சாகுபடி செய்யவில்லை என்றால் சரியல்ல, இது நாள்வரை நான் தான் சாகுபடி செய்து வருகிறேன்.

3. நான் நீதிமன்ற உத்தரவை மீறி தாவா சொத்தில் சாகுபடி செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான் எந்த கால கட்டத்திலும் தாவா சொத்தில் சாகுபடி செய்யவே இல்லை என்றால் சரியல்ல. நான் சாகுபடி செய்வதற்குண்டான ஆவணங்கள் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வில்லை என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் நான் சொல்வது போல் எந்த ஆவணங்களையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. தாவா சொத்தை ஜெகநாதன் ஆகிய இவ்வழக்கின் வாதி கிரயம் பெற்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

4. தாவா சொத்தை நான் சாகுபடி செய்வதற்குண்டான குத்தகை தொகையை வாதியிடம் நான் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. 2010 முதல் குத்தகை தொகை எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். தாவா சொத்திற்கான குத்தகை தொகை கொடுக்காததற்கான காரணம்

நான் தாவா சொத்தில் சாகுபடி எதுவும் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. மாரிமுத்துவிடம் குத்தகை தொகை செலுத்தியதற்கான ரசீதினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது நிரூபண வாக்குமூலத்தில் நான் சாகுபடி செய்த விபரம் தெரிந்தும் வாதி குறைந்த விலைக்கு 2010 ல் கிரயம் பெற்ற விபரத்தினை சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்தை எந்த காலத்திலும் நான் சாகுபடி செய்யவில்லை என்றாலும், 2010 ல் வாதி கிரயம் பெற்றது முதல் வாதியின் அனுபவத்தில் தாவா சொத்து இருந்து வருகிறது என்றாலும் சரியல்ல.

5. 2017 நீதிமன்ற உத்தரவிற்கு பிறகு தாவா சொத்தில் நான் சாகுபடி எதுவும் செய்யவில்லை என்றால் சரியல்ல. நீதிமன்ற உத்தரவை மீறி செயல்பட்டால் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடுக்கப்படும் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். நீதிமன்ற உத்தரவு குறித்து எனது வழக்கறிஞர் என்னிடம் தெரிவித்தாரா என்றால் சொல்லவில்லை. நானும் அது குறித்து கேட்டு தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரிதான். நான் எந்த காலததிலும் சாகுபடி செய்யவில்லை என்பதால் தான் வாதி என் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக தாவா சொத்தில் சாகுபடி செய்து வருவதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

ஒம்/– ர.மீனாட்சி எம்.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,–
கீழ்வேளூர்.